30.04.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## வேளாண்மைப் படிப்புகளில் சேர விண்ணப்பம் விநியோகம் மே 12-இல் தொடக்கம்: துணைவேந்தர் தகவல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், அதன் இணைப்பு, உறுப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு மே 12-ஆம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என்று பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கோவையில் வெள்ளிக்கிழமை அவர் கூறியதாவது:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், அதன் இணைப்பு, உறுப்புக் கல்லூரிகளில் இளம் அறிவியல் பிரிவில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல் உள்ளிட்ட 6 படிப்புகளும், இளம் தொழில்நுட்பப் படிப்புகளில் உயிர்த் தொழில்நுட்பவியல், உயிர்த் தகவலியல் உள்ளிட்ட 7 படிப்புகளும் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டும் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை ஆன்லைன் மூலமாகவே பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். 2016-17-ஆம் ஆண்டுக்கான விண்ணப்பம் விநியோகம் குறித்த அறிவிப்பு மே 4-ஆம் தேதி வெளியாகும்.

மாணவர்கள் மே 12-ஆம் தேதி முதல் www.tnau.ac.inadmission.html என்ற இணையதள பக்கத்துக்குச் சென்று விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, பதிவு செய்ய வேண்டும். பொதுப் பிரிவு மாணவர்கள் ரூ.600, எஸ்.சி.,எஸ்.டி. பிரிவினர் ரூ.300 விண்ணப்பக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப ஜூன் 11-ஆம் தேதி கடைசி நாள்.

சிறப்பு ஒதுக்கீடுதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து, தேவையான சான்றிதழ்களை இணைத்து, பல்கலைக்கழக மாணவர் சேர்க்கைப் பிரிவில் நேரில் வழங்க வேண்டும்.

தரவரிசைப் பட்டியல் ஜூன் 20-ஆம் தேதி வெளியிடப்படும். ஒற்றைச்சாளர முறையில் கலந்தாய்வு நடைபெறும். சிறப்பு ஒதுக்கீட்டுக்கானக் கலந்தாய்வு ஜூன் 27, 28-ஆம் தேதிகளில் நடைபெறும். தொழில் கல்விக் கலந்தாய்வு ஜூலை 13-இல் நடைபெறும்.

முதல் கட்டக் கலந்தாய்வு ஜூலை 4-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை நடைபெறும். வெளிநாடு வாழ் இந்தியர்கள், நிறுவனங்களுக்கான கலந்தாய்வு ஜூலை 15, 16-ஆம் தேதிகளிலும், இரண்டாம் கட்டக் கலந்தாய்வு ஜூலை 25-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதி வரையிலும் நடைபெறும். கலந்தாய்வுக்குப் பின்னர் கல்லூரிகள் ஆகஸ்ட் 1-ஆம் தேதி தொடங்கும். தேவைப்பட்டால் மூன்றாம் கட்டக் கலந்தாய்வு ஆகஸ்ட் 8 முதல் 11-ஆம் தேதி வரை நடைபெறும்.

இளம் அறிவியல் பிரிவில் உறுப்புக் கல்லூரிகளில் 915 இடங்களும், இணைப்புக் கல்லூரிகளில் 1,380 இடங்களும், இளம் தொழில்நுட்பப் படிப்புகளில் 305 இடங்களும் என மொத்தம் 2,600 இடங்கள் உள்ளன. கடந்த ஆண்டு 42 ஆயிரம் விண்ணப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன. அதில் 32 ஆயிரம் பேர் விண்ணப்பித்தனர்.

மொத்த அரசு ஒதுக்கீட்டில் 15 சதவீதம் மத்திய அரசுக்கு வழங்கப்படும். இணைப்புக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களும் இணையதளம் மூலமாகவே விண்ணப்பிக்க வேண்டும். அவர்களது அனைத்துச் சான்றிதழ்களையும் பல்கலைக்கழகம் சரிபார்க்கும். மேலும், அந்தக் கல்லூரிகளுக்கான முதல்வர்களையும் நாங்களே நியமித்து தேர்வுகளையும் நாங்களே நடத்துவோம்.

கடந்த ஆண்டுகளைப் போலவே இளம் அறிவியலில் வேளாண்மைப் படிப்பிலும், இந்த ஆண்டு வனவியல் படிப்பிலும் சேர மாணவர்கள் இடையே போட்டி அதிகமாக இருக்கும் என்று கருதுகிறோம். வேளாண்

படிப்பை முடிக்கும் மாணவர்களில் ஆண்டுதோறும் 450 முதல் 600 பேர் வரை அரசுப் பணிக்குச் செல்கின்றனர்.

தோட்டக்கலை மாணவர்களில் சுமார் 400 பேர் வரையிலும், வேளாண் பொறியியல் மாணவர்களில் சுமார் 200 பேர் வரையிலும் அரசுப் பணிகளுக்குத் தேர்வாகின்றனர். 20 முதல் 30 சதவீதம் மாணவர்கள் உயர் கல்வியைத் தேர்வு செய்கின்றனர் என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### மரங்களால் பெயர்பெற்ற ஊர்கள்

மரங்களின் அருமையை உணர்ந்த நம் முன்னோர்கள் பல ஊர்களின் பெயரை மரங்களைச் சார்ந்தே வைத்தனர்.
தமிழகக் கடற்கரையோரங்களில் தானே வளர்வது தில்லை மரம். தில்லை மரங்கள் நிறைந்ததால் தில்லைவனம் எனப்பெயர் பெற்று பின்பு 'தில்லை' என ஊர்ப்பெயர் ஆனகு. கில்லையயில் உள்ள கோயிலின் பெயரே சிதம்பரம் தற்போது ஊரின் பெயரிலேயே கோயிலின் பெயர் விளங்குகிறது. கரூர் மாவட்டத்தில் உள்ள குளித்தலையின் பழைய பெயர் 'கடம்பர் கோயில்' கடம்ப மரங்கள் நிறைந்ததால் கடம்பர் கோயில் ஆனது. 'பாலை' மரங்கள் நிறைந்ததால் ஓர் ஊரின் பெயர் 'திருப்பாலைத்துறை' என ஆனது.

### கொளுத்தும் கோடை வெயில் குளிர்பானம், இளநீர் விலைஉயர்வு

பழநி: பழநிகோயிலுக்கு கோடைவிடுமுறையை முன்னிட்டு குவியும் பக்தர்கள் வெயிலின் தாக்கத்தால் அவதிப்படுகின்றனர்.

தமிழகத்தில் புகழ்பெற்ற ஆன்மிக ஸ்தலமான பழநிகோயிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். தற்போது கோடைவிடுமுறையால்

பக்தர்களின் வருகை அதிகரித்துள்ளது. பக்தர்கள் அதிகளவில் குவியும் அடிவாரம் பூங்காரோடு, கிரிவீதி உட்பட பல இடங்களில் குடிநீர் வசதிகள் போதுமான அளவில் இல்லை. இதனால் பயணிகள் குடிநீருக்கு அலைய வேண்டியுள்ளது.

தண்ணீர் பாட்டில்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. இலவச சுற்றுலா வாகனங்கள் நிறுத்துமிடத்தில் மேற்கூரைவசதி இல்லை. இதனால் கிரிவீதியில் வாகனங்களை நிறுத்துகின்றனர். இந்த மறைவை பயன்படுத்தி சுகாதாரக்கேடுகளும்நடக்கிறது. வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் தரமற்ற தண்ணீர் பாக்கெட், குளிர்பானங்களை அடக்கவிலையை காட்டிலும் ரூ.3 முதல் ரூ.5 வரை கூடுதலாக விற்கின்றனர்.

இளநீர் ஒன்றின் விலை ரூ.35 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது. கோடை வெப்பத்தை தணிக்கும் பழங்கள், குளிர்பானங்கள், இளநீர் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது. திடீர் விலை ஏற்றத்தால் பக்தர்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆகையால் அடிவாரம் சன்னதிவீதி, அய்யம்புள்ளி, கிரிவீதிகளில் இலவச மோர்பந்தல், கூடுதல் குடிநீர் வசதிகளை நகராட்சி, கோயில் நிர்வாகத்தினர் செய்துதரவேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நீடாமங்கலம் வேளாண் நிலையத்தில் பயிர் பதன தொழில்நுட்ப கழக மாணவிகள் பயிற்சி

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையக்துக்கு, இந்திய பயிர் பதன தொழில்நுட்ப கழகத்தில் உணவு பதப்படுத்துதல் துறையில் இறுதியாண்டு படிக்கும் மாணவிகள் 22 பேர் வருகை தந்துள்ளனர். இவர்கள் நீடாமங்கலம் பகுதியில் வேளாண் சார் தொழில் வளர்ப்பு திட்டத்தின் கீழ் 10 நாட்கள் பயிற்சி பெற

உள்ளனர்.இவர்களுக்கு உதவியாக முனைவர் பாஸ்கரன், திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயலெட்சுமி, காமராஜ், உதவி ரோசிரியர்கள் விஜயகுமார், கவிதாஸ்ரீ, ராஜாரமேஷ் உதவியுடன் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள சித்தமல்லி, ராயபுரம், ஆலங்குடி, கிராமங்களில் விவசாயிகளை சந்தித்து மண்வளம், பயிர் மற்றும் வேளாண் முறைகள், நீர்வளமேம்பாடு, பயிர்சுழற்சி முறைகள், வேளாண் சார்ந்த தொழில்நுட்பம் பற்றி பயிற்சி பெற்று வருகின்றனர். அறுவடை பின் செய் நேர்த்தி மற்றும் மதிப்பு கூட்டுதலின் முக்கியத்துவம் பற்றியும் உணவு சார்ந்த சிறு தொழில் முறைகளையும் கேட்டறிந்தனர். மேலும் அரசு மானியங்கள் எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ.லைசன்ஸ் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

## பார்த்தீனிய செடியின் மூலம் மண்புழு உரம் தயாரிக்கலாம்

மதுரை, : விவசாயிகள் பார்த்தினீய செடிகளில் மண்புழு உரம் தயாரித்து பயன் அடைலாம் என்று வேளாண் அதிகாரி ெதரிவித்துள்ளார். மதுரை வேளாண்மை துணை இயக்குநர் இந்திராகாந்தி கூறியதாவது: விவசாயத்திற்கு மண்புழு உரத்திற்கு ஈடாக உலகில் வேறு எந்த ஒரு உரமும் இல்லை. மண்புழு பயனுள்ள ஜீவன்கள் என்று விஞ்ஞானிகளும் ெதாடர்ந்து பதிவு செய்து வருகின்றனர். மனிதர்களின் பல்வேறு தவறுகளால், மண்புழுக்களின் பெருக்கம் தடைப்பட்டு, அழிந்து கொண்டே இருக்கிறது.

மண்ணில் மண்புழுக்களும், நுண்ணுயிர்களும் இல்லாமல் போனால், விவசாயம் இல்லாமல் அழிந்து போய்விடும். எனவே அவற்றிற்கு தொடர்ந்து உணவு அளித்துக் கொண்டே இருக்க வேண்டும். அதன் காரணமாக தாவரக் கழிவு, விலங்குக் கழிவுகளில், மண்புழுக்கள், பல்கிப் பெருகிக் கொண்டே இருக்க வாய்ப்புள்ளது.

எனவே பார்த்தீனிய செடியில் மண்புழு உரம் தயாரிக்கலாம். பார்த்தீனிய செடிகளை வேரோடு பிடுங்கி நிழலான ஓரிடத்தில் மொத்தமாக போட்டு வைக்க வேண்டும். இந்த மொத்த பார்த்தீனிய செடிகளின் மீதும் சாணத்தைக் கரைத்து தெளித்து, தென்னஞ்சோகை போன்றவற்றால் அதை மூடி வைக்க வேண்டும். அப்படி மொத்தமாக போட்ட பார்த்தீனிய செடிகளை காயாமல் தொடர்ந்து தண்ணீர் தெளித்து வந்தால் 90 நாட்களில் செடி குப்பைகள், மண்புழு உரமாக மாறிவிடும். அதனை விவசாயத்திற்கு பயன்படுத்தலாம்.

அழிப்பது எப்படி?:

விவசாய நிலத்தில் பார்த்தீனிய செடிகளை முற்றிலுமாக அழிக்க சுண்ணாம்பு, தண்ணீர், உப்பு, கோமியம், வேப்பெண்ணெய் போன்றவைகளை மொத்தமாக கலந்து நெல், சிறுதானியங்கள், காய்கறி, பயிர்களுக்கு இடையில் தெளித்தால், வளராமல் தடுத்து விடலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நெல்லை மாவட்டத்தில் நிலக்கடலை விளைச்சல் அமோகம் குவிண்டால் ரூ.3 ஆயிரத்திற்கு விற்பனை

நெல்லை நெல்லை மாவட்டத்தில் உள்ள மானாவாரி நிலங்களில் நிலக்கடலை சாகுபடி தீவிரமாக நடக்கிறது. ஒரு குவிண்டால் ரூ.3 ஆயிரம் வரை விலை போவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தமிழகத்தில் மானாவாரி நிலங்களில் பயிரிடப்படும் நிலக்கடலையில் நாட்டு நிலக்கடலை மட்டும் இருந்தது. அதன் பின்னர் வீரிய ஒட்டு ரக நிலக்கடலை வந்தது. இதில் விளைச்சல் அதிகம் என்பதால் பெரும்பாலான விவசாயிகள் ஒட்டு ரக நிலக்கடலையையே பயிரிடுகின்றனர். நாட்டு கடலையில் ஒரு தேடுக்கு இரண்டு கடலை வீதமும், ஒட்டு ரகத்தில் ஒரு தேடுக்கு 3 கடலை வீதமும் இருக்கும்.

நிலக்கடலைக்கு முதலில் நிலத்தை பண்படுத்தி பின்னர் உழுது விதை ஊன்ற வேண்டும். ஒரு ஏக்கருக்கு சுமார் 20 முதல் 25 கிலோ வரை விதை ஊன்றப்படுகிறது. இதற்கு 12 நாட்களுக்கு ஒரு முறை இறவை பாசனம்

மூலம் தண்ணீர் விட வேண்டும். விதை ஊன்றுவதற்கு முன்பு டிஏபி அடி உரம் ஒரு ஏக்கருக்கு ஒரு மூடை வீதம் இட வேண்டும். நிலக்கடலை செடி முளைத்த 15 நாட்களில் ஜிப்சம் இட வேண்டும். தொடர்ந்து காய் காய்க்கும் பருவத்தில் ஒரு ஏக்கருக்கு ஒரு மூட்டை வீதம் போட வேண்டும். நிலத்தின் தேவைக்கேற்ப யூரியா பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவை அனைத்தும் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சும் போது அதனுடையே கலந்து விடுவதால் உரங்கள் செடியின் வேர் வரை செல்கிறது. இதற்கு ரூ.15 ஆயிரம் வரை செலவாகிறது.

நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை தாமிரபரணி உள்ளிட்ட ஆற்று பாசனங்கள் ஏராளம் உள்ளன. அதே போல வானம் பார்த்த பூமி பகுதிகளில் மானாவாரி பாசனங்களும் உள்ளன. இதில் மானூர் வட்டார பகுதியில் மானாவாரி விவசாயம் நடந்து வருகிறது. இங்கு 120 நாள் பயிரான நிலக்கடலை பயிரிடப்படுகிறது. கடந்த டிசம்பர் மாதம் பெய்த மழை காரணமாக நெல்லை மாவட்டத்தில் உள்ள குளங்கள், கண்மாய் உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்ப வழிந்தன.

இதை நம்பி சங்கரன்கோவில் அருகே உள்ள வன்னிக்கோனேந்தல், தேவர்குளம் பகுதி மானாவாரி நிலங்களில் விவசாயிகள் நிலக்கடலை பயிரிட்டனர்.

இப்பகுதியில் தற்போது செடிகளில் இருந்து நிலக்கடலைகளை சாகுபடி செய்யும் பணியில் விவசாயிகள் மும்முரமாக உள்ளனர். ஒரு ஏக்கரில் இருந்து சுமார் 15 குவிண்டால் வரை நிலக்கடலை பறிக்கப்படுகிறது. தற்போது ஒரு கிலோ ரூ.30 வரை விற்பனையாகிறது. அதாவது ஒரு குவிண்டால் நிலக்கடலை ரூ.3 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது.

கொளுத்தும் வெயிலில் பணி

நெல்லை மாவட்ட பகுதியில் தற்போது 100 டிகிரியை கடந்து வெயில் வறுத்தெடுக்கிறது. மானூர் பகுதியில்நடைபெறும் நிலக்கடலை பறிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தலைக்கு தலைப்பாகை கட்டியே

வேலை செய்கின்றனர். சிலர் தலைப்பாகைக்கு மேல் பறிக்கப்பட்ட நிலக்கடலை செடியை வைத்துக் கொண்டு பணியை மேற்கொள்கின்றனர். இவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.120 சம்பளமும், 2 பக்கா (3 கிலோ) நிலக்கடலையும் வழங்கப்படுகிறது.

## ரப்பர் விலை ஏறுமுகம் கிலோ ரூ143 ஆக அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

நாகர்கோவில், : கடும் வீழ்ச்சியடைந்த ரப்பர் விலை மீண்டும் உயரத்தொடங்கியுள்ளது. ரப்பர் விலை கடும் சரிவை சந்தித்திருந்தது. கடந்த பிப்ரவரி மாதம் ஆர்எஸ்எஸ் 4 கிரேடு ரப்பர் விலை ரூ.91.50 ஆக சரிந்திருந்தது. தற்போது 56.3 சதவீதம் உயர்ந்து ரூ.143 ஆக உயர்ந்துள்ளது. ரப்பர் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. அதிக அளவு ரப்பர் உற்பத்தி செய்கின்ற மலேஷியா, இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் சர்வதேச மார்க்கெட்டில் ரப்பரின் விலை உயருவதற்காக ஏற்றுமதிக்கு கடும் கட்டுப்பாடுகளை விதித்தன.

இதன் காரணமாக ரப்பர் விலை உயர தொடங்கியுள்ளது. மேலும் கச்சா எண்ணெய் விலை உயர்வும் இதற்கு மற்றொரு காரணம் ஆகும். வரும் ஆகஸ்ட் 31ம் தேதி வரை உலக நாடுகள் ரப்பர் ஏற்றுமதியில் 6 லட்சத்து 15 ஆயிரம் டன் குறைக்க முடிவு செய்துள்ளது.

இந்தியாவில் இந்த ஆண்டு மொத்த உற்பத்தி வழக்கத்தைவிட 6 லட்சம் டன் அதிகம் ஆகும். சர்வதேச மார்க்கெட்டில் ரப்பர் வரத்து குறைய தொடங்கியுள்ளதால் விலை உயர தொடங்கியுள்ளது. ஆகஸ்ட் 31 வரை ரப்பர் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும் அதனை தொடர செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் ரப்பர் விலை தொடர்ந்து உயருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளன. இது ரப்பர் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**உடல் எரிச்சலை தணிக்கும் மருதாணி**




கோடைகாலம் என்பதால் வெப்பம் அதிகமாக இருக்கும். இதனால் கை, கால்களில் ஏற்படும் எரிச்சலை தணிப்பது, உடல் உஷ்ணத்தை குறைப்பது, பித்தத்தை சமன்படுத்துவது எப்படி.. மருதாணி இலைகள், வேப்பம் பூ, பாகற்காய் கொடியின் சாறு ஆகியவற்றை கொண்டு கோடைகால நோய்களில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

மருதாணியை பயன்படுத்தி உடல் எரிச்சலுக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: மருதாணி இலைகள், பனங்கற்கண்டு, பால். ஒருபிடி மருதாணி இலைகளை எடுத்துக் கொள்ளவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி பால் சேர்த்து குடித்துவர உள் உறுப்புகளின் உஷ்ணம் தணியும். வயிறு, நெஞ்சு எரிச்சல் சரியாகும். இது வெள்ளைப்படுதலுக்கு மருந்தாகிறது. உடல் எரிச்சல் குணமாகும்.

மருதாணியை அரைத்து உள்ளங்கை, கால்களில் பூசினால் பித்தம் தணியும். உடலில் உள்ள உஷ்ணம் குறையும். வெயில் காலத்தில் வாரம் ஒருமுறையாவது மருதாணி வைத்துக் கொண்டால் நன்மை கிடைக்கும். மருதாணி என்பது அழகு சேர்ப்பது மட்டுமல்ல. இதில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. மருதாணி நுண்கிருமிகளை அழிக்கும் தன்மை

கொண்டது. நோய் கிருமிகளை தடுக்க கூடியது. பூஞ்சை காளான்களை போக்க கூடியது. உடலுக்கு குளிர்ச்சி தரவல்லது. சுட்டெரிக்கும் வெயிலால் வியர்குரு உள்ளிட்டவை ஏற்படும். எனவே, வெப்பத்தில் நம்மை காத்துக்கொள்ள வேண்டிய அவசியம். வேப்பம் பூவை பயன்படுத்தி உடல் எரிச்சலை தடுக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வேப்பம் பூ, இஞ்சி சாறு, பனங்கற்கண்டு. ஒருவேளைக்கான தேனீர் தயாரிக்க சிறிது வேப்பம் பூவை எடுத்துக் கொள்ளவும்.

இதனுடன் ஒரு ஸ்பூன் இஞ்சி சாறு, சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். சர்க்கரை நோய் உள்ளவர்கள் பனங்கற்கண்டு சேர்க்க தேவையில்லை. இதை வடிகட்டி குடித்துவர உடலில் ஏற்படும் பித்தம் சமன்படும். உடல் எரிச்சல் இல்லாமல் போகும்.பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட வேப்பம் பூ குளிர்ச்சி தரக்கூடியது. பித்தத்தை குறைக்கும் தன்மை கொண்டது.கோடைகாலத்தில் ஏற்படும் அதிக வெப்பத்தால் பித்தம் அதிகரிக்கும். இதனால் உடல் எரிச்சல் ஏற்படும். பாகற்காய் கொடியின் இலைகளை பசையாக அரைத்து, அதன் சாறை உள்ளங்கை, கால்களில் தடவும் போது எரிச்சல் சரியாகும்.

**கரும்புள்ளியை போக்கும் எலுமிச்சை**



கோடைகாலத்தில் அதிக வெயிலால் உடலில் எண்ணெய் பிசுபிசுப்பு, வியர்வை, கரும்புள்ளிகள் ஏற்படும். எலுமிச்சை, வெள்ளரி, ஆரஞ்சு, தக்காளி ஆகியவற்றை பயன்படுத்தி இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதுடன், உடலுக்கு குளிர்ச்சி, வண்ணத்தை தரும் எலுமிச்சையின் பயன்அறிவோம்.

எலுமிச்சையை பயன்படுத்தி உடலில் எண்ணெய் வடிதல், கரும்புள்ளிக்கான மருந்து தயாரிக்கலாம். எலுமிச்சை சாறுடன் சம அளவு தேன் சேர்த்து நன்றாக கலக்கவும். இதை முகத்தில் தடவி சுமார் 15 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவினால் எண்ணெய் வடிதல் போகும். தோலில் ஏற்படும் கரும்புள்ளி மறையும். முகப்பரு வராமல் தடுக்கும்.கொளுத்தும் வெயில் காரணமாக எண்ணெய் அதிகளவில் சுரப்பதால் தோல் பாதிக்கும். இதற்கு எலுமிச்சை மருந்தாகிறது. தோல் ஆரோக்கியம் அடையும். ஆரஞ்சு பழத்தின் தோலை பயன்படுத்தி தோலில் ஏற்படும் கரும்புள்ளிகளை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: சந்தனம், ஆரஞ்சு பழத்தோல், பால் அல்லது பன்னீர். சந்தனப் பொடியுடன் நீர் விடாமல் அரைத்த ஆரஞ்சு பழத்தோலை சேர்க்கவும். இதனுடன் பால் அல்லது பன்னீர் சேர்த்து நன்றாக கலக்கவும். இதை முகத்தில் மேல்பூச்சாக பயன்படுத்தி சுமார் 15 நிமிடங்கள் கழித்து கழுவும்போது கருமை, எண்ணெய் பிசுபிசுப்பு போகும். உடல் குளிர்ச்சி அடையும். வியர்வை இல்லாமல் செய்கிறது. ஆரஞ்சு பழத்தோல் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. சந்தனம் குளிர்ச்சி தரக்கூடியது. பன்னீர் எரிச்சலை போக்கும்.

தக்காளி, வெள்ளரியை பயன்படுத்தி எண்ணெய் வடிதல், கரும்புள்ளிக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வெள்ளரிக்காய், அரிசி மாவு. வெள்ளரிக்காய் பசையுடன் அரிசி மாவு சேர்த்து நன்றாக கலக்கவும். இதை முகத்தில் பூசி குளிர்ந்த நீரில் கழுவினால், எண்ணெய் பசை, கரும்புள்ளி குறையும். கோடைகாலத்தில் ஏற்படும் அதிகப்படியான உஷ்ணம் காரணமாக எண்ணெய் பிசுபிசு,

வியர்வை, கரும்புள்ளி போன்றவை தவிர்க்க முடியாதவை. வெள்ளரிக்காய் வியர்வையை தடுக்கும் தன்மை கொண்டது. இதை பயன்படுத்துவதன் மூலம் தோல் நன்றாக இருக்கும்.

தக்காளியை பயன்படுத்தி கரும்புள்ளியை போக்கும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: தக்காளி, எலுமிச்சை, மஞ்சள் பொடி, கடலை மாவு. தக்காளியை நீர்விடாமல் அரைத்து எடுக்கவும். இதில் சிறிது எலுமிச்சை சாறு பிழியவும். சிறிது மஞ்சள் பொடி, கடலை மாவு சேர்த்து நன்றாக கலந்து முகத்தில் பூசவும். சிறிது நேரம் கழித்து கழுவினால் முகத்தில் உள்ள கரும்புள்ளி மறையும். எளிதில் கிடைக்க கூடிய எலுமிச்சை, வெள்ளரி, தக்காளி போன்றவற்றை பயன்படுத்துவதன் மூலம் கோடைகாலத்தில் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காணலாம்.

**கண் எரிச்சலை போக்கும் முள்ளங்கி, வெள்ளரி**



கோடைகாலத்தில் ஏற்படும் அதிக வெப்பத்தால் கண் எரிச்சல், கண்களில் சிவப்பு தன்மை ஆகிய பிரச்னைகள் ஏற்படும். இதை முள்ளங்கி, தக்காளி, வெள்ளரி, கொத்துமல்லி போன்றவற்றை பயன்படுத்தி கண் எரிச்சலுக்கான மருந்து தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்**: முள்ளங்கி, தக்காளி, வெள்ளரி, சீரகப்பொடி, உப்பு. கால் டம்ளர் முள்ளங்கி சாறு, சம அளவு தக்காளி சாறு மற்றும்

வெள்ளரி சாறுடன் கால் ஸ்பூன் சீரகப் பொடி, சிறிது சமயல் உப்பு ஆகியவற்றை சேர்த்து கலந்து வாரம் இருமுறை குடித்து வந்தால் கண் எரிச்சல், கண்ணில் ஏற்படும் சிவப்பு தன்மை, சிறுநீர் பாதையில் ஏற்படும் எரிச்சல் சரியாகும். உள் உறுப்புகளில் ஏற்படும் அழற்சி குணமாகும்.

உடல் குளிர்ச்சி அடையும்.நந்தியா வட்டை பூக்களை பயன்படுத்தி கண் எரிச்சலை போக்கும் மருந்து தயாரிக்கலாம். நந்தியா வட்டை பூக்களை இரவு நேரத்தில் தண்ணீரில் ஊற வைக்கவும். இந்த தண்ணீரை கொண்டு கண்களை கழுவினால் கண் எரிச்சல் சரியாகும். பூக்களை கண்களின் மேல் வைத்து 15 நிமிடம் கட்டி வைத்தால், கண் சோர்வு, கண் எரிச்சல் குணமாகும். வெயிலில் செல்லும்போது கண்கள் சிவந்து போகும்.

இந்நிலையில், நந்தியா வட்டை பூக்கள் உடலில் ஏற்படும் உஷ்ணத்தை குறைப்பதால் கண் பிரச்னைகள் சரியாகும். கண்களில் அழுக்கு படிதலை தடுப்பதுடன், கண்களுக்கு ஆரோக்கியம் தரும். பார்வையை தெளிவுபடுத்தும்.திரிபலா சூரணத்தை பயன்படுத்தி கண் எரிச்சலை போக்கும் மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் திரிபலா சூரணத்தில் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை நன்றாக ஆற வைத்து, 2 முறை வடிக்கட்டி எடுத்து கொள்ளவும்.

இந்த நீரை கொண்டு கண்கள், புண்கள், கொப்புளங்களை கழுவுவதால் அவைகள் வெகு விரைவாக ஆறும். கொத்துமல்லி இலைகளை சுத்தப்படுத்தி அரைத்து சாறு எடுக்கவும். மெல்லிய துணியில் இந்த சாறை நனைத்து கண்களுக்கு மேல் ஒத்தடம் கொடுக்கலாம் அல்லது கண்கள் மீது 15 நிமிடங்கள் வைத்திருந்தால் கண் எரிச்சல் சரியாகும்.

இதேபோன்று, வில்வ இலை சாறு எடுத்து கண்களில் வைத்தால் கண் எரிச்சல் குணமாகும். தற்போதைய காலகட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளது. புற ஊதா கதிர்கள் அதிகளவில் தாக்குவதால் கண்கள் பாதிக்கிறது. கண்களின் சிவப்பு தன்மை, கண் எரிச்சல், கிருமிகள் தொற்றி கொள்வது போன்றவை நிகழும். இதற்கு

கொத்துமல்லி, வில்வ இலை சாறு மருந்தாகிறது. இதுபோன்ற எளிய மருத்துவத்தின் மூலம் கண்களை நாம் பாதுகாக்கலாம்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விருத்தாசலத்துக்கு 1,888 டன் யூரியா உரம், ரெயில் மூலம் வந்தது



விருத்தாசலம்,

விருத்தாசலத்துக்கு 1,888 டன் யூரியா உரம் ரெயில் மூலம் வந்து இறங்கியது.

யூரியா உரம்

கடலூர் மாவட்டத்தில் தற்போது குறுவை நெல் சாகுபடி பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. தற்போது நெற்பயிர்கள் வளர்ச்சிக்கான

காலக்கட்டத்திலும், தூர் பிடிக்கும் தருவாயிலும் உள்ளது. இந்நிலையில் பயிருக்கு யூரியா உரம் தேவை அதிகம் ஏற்படும். இதனால் விவசாயிகளுக்கு யூரியா தட்டுப்பாட்டை சமாளிக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்ததன் பேரில் சென்னை மணலியில் அமைந்துள்ள மத்திய அரசு பொதுதுறை நிறுவனத்தில் இருந்து விஜய் யூரியா வந்தது. கடலூர் மாவட்டத்திற்கு ஆயிரத்தி 750 டன்னும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு 58 டன்னும் ரெயில் மூலம் விருத்தாசலம் ஜங்ஷனுக்கு வந்தது. இதனை அங்கிருந்த பணியாளர்கள் லாரிகள் மூலம் ஏற்றி கடலூர் மாவட்டம் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்திற்கு ஏற்றி அனுப்பி வருகின்றனர்.

## மாலை, இரவு வேளைகளில் மட்டுமே கொடுக்க வேண்டும் ஆராய்ச்சி நிலையம் அறிவுறுத்தல்

அதிக அளவு வெப்பம் நிலவும் என்பதால், கோழிகளுக்கான தீவனத்தை இனி மாலை மற்றும் இரவு வேளைகளில் மட்டுமே கொடுத்து வரவேண்டும் என ஆராய்ச்சி நிலையம் அறிவுறுத்தி உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அடுத்த 4 நாட்கள் வானம் லேசான, ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பில்லை. மே மாதம் 3-ந் தேதி 0.5 மி.மீ. மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 104 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 80.6 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 60, 60, 60, 75 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக முறையே 30, 30 30, 40 சதவீதமாகவும் இருக்கும்.

மாலை, இரவு வேளை

கோடையின் தாக்கம் தொடர்கிறது. தொடர்ந்து அதிகபட்ச வெப்பம் 104 டிகிரியை ஒட்டியே காணப்படும். 15 நாட்களுக்கும் மேலாக 104 டிகிரியை ஒட்டியே பகல் வெப்பம் நிலவி வந்துள்ளது. இனிவரும் நாட்களிலும், அதிக அளவு வெப்பம் நிலவும் என்பதால், கோழிகளுக்கான தீவனத்தை இனி மாலை மற்றும் இரவு வேளைகளில் மட்டுமே கொடுத்து வரவேண்டும். குறிப்பாக, மாலை 6 மணி முதல் 10 மணி வரையிலும், அதிகாலை 3 மணி முதல் காலை 9 மணி வரையிலும் தீவனமிட்டு வரவேண்டும். இதனால், பகல் வேளையில் தீவனம் எடுக்காமல் வெப்ப அதிர்ச்சிற்கு உட்படாமல் கோழிகள் தடுக்கப்பட்டு, இறப்பையும் தவிர்க்கலாம். முட்டை எடை மிகவும் குறைந்துள்ளதால், தீவனத்தில் அமினோ அமிலங்கள் மற்றும் குளிர்ந்த குடிநீர் தேவையான அளவு எடுத்துக்கொள்ளும் வகையில் மேலாண்மையை கவனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டும்.

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. ஆகவே, பண்ணையாளர்கள் தகுந்த கோடைகால பராமரிப்பு முறைகளை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் வெப்ப அயற்சியின் தாக்கத்தை கட்டுப்படுத்த தெளிப்பான் பயன்படுத்துமாறும், தீவனப் பராமரிப்பு முறைகளை மேம்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அரசு தோட்டக்கலை பண்ணையில் மல்லிகை நாற்றங்கால் அதிகாரிகள் நடவடிக்கை

கீழக்கரை,

ராமநாதபுரம் மாவட்டம் ஓரியூரில் அமைய உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில் மல்லிகை நாற்றங்கால் அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முதல்கட்ட பணி

ராமநாதபுரம் மாவட்டத்தில் முதன்முதலாக அரசு சார்பில் தோட்டக்கலை அபிவிருத்தி நிறுவனத்தின் சார்பில் ரூ.1 கோடியே 18 லட்சம் செலவில் தோட்டக்கலை பண்ணை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. முதல்கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் 37 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு இதற்கான முதல்கட்ட பணிகள் தொடங்கி உள்ளன. பண்ணை அமைக்க நல்ல தண்ணீரும், மணல்பாங்கான இடமும் தேவை என்பதால் இதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ள ஓரியூர் பகுதி தேர்வு செய்யப்பட்டுஉள்ளது. சாலைவசதி, குடிநீர் வசதி மற்றும் பண்ணையை சுற்றிலும் முள்வேலி அமைத்து சரிசெய்யும் பணிகள் ஓரிரு நாட்களில் தொடங்கப்பட உள்ளன. இந்த பணிகள் முடிவடைந்தபின் பண்ணையில் காய்கறி மற்றும் பழ செடிகள் வளர்ப்பு போன்றவை தொடங்கப்படும். அரசு பண்ணையில் பல்வேறு பழ நாற்றுகள் வளர்க்கப்பட்டு தோட்டக்கலைத்துறையின் சார்பில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.

இந்த அரசு பண்ணையில் விவசாயிகளின் பணப்பயிரான முண்டு மிளகாய் விவசாயத்திற்கான தர நிர்ணயம் செய்யப்பட்ட விதைகள் அரசு சார்பில் வழங்கவும் திட்டமிடப்பட்டுஉள்ளது. இதுதவிர இந்த அரசு பண்ணையில் அமைக்கப்பட உள்ள மாதிரி பண்ணையில் வீரியமிக்க காய்கறிகள், மிளகாய் போன்றவை எவ்வாறு பயிரிடுவது என்று விளக்கம் அளிக்கப்பட உள்ளது. மேலும் மாம்பழ பண்ணை அமைத்து 5 மீட்டர் குறைந்த இடைவெளியில் எவ்வாறு மாம்பழம் பயிரிடுவது, குட்டை, நெட்டை, ஒட்டு மரங்களின் மூலம் அதிக மகசூல் பெறுவது எப்படி என்று விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட உள்ளது. இந்த பண்ணையில் 4 ஏக்கர் பரப்பளவில் தரம் வாய்ந்த நாற்றங்கால் அமைத்து அதில் மாம்பழம், கொய்யா, மல்லி போன்ற கன்றுகளை வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி மல்லிகை நாற்றுகள் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதியாகிறது. இதனை கருத்தில் கொண்டு தற்போது இந்த அரசு தோட்டக்கலை பண்ணையில்

மல்லிகை நாற்றங்கால் அமைக்கவும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன்மூலம் தரமான மல்லிகை நாற்றுகளை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அதிகஅளவில் ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு ஏற்படும்.

**புளி விளைச்சல் அமோகம்; வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி**



காளையார்கோவில்

சிவகங்கை மாவட்டத்தில் இந்த ஆண்டு புளி விளைச்சல் அமோகமாக உள்ளது. அவை தரம் பிரிக்கப்பட்டு வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

<u>புளி விளைச்சல் அதிகம்</u>

ஆண்டுதோறும் கோடைகாலங்களில் தமிழகம் முழுவதும் சாலையோரம், கிராமங்களில் உள்ள புளியமரத்தில் புளியம்பழம் விளைச்சல் ஏற்பட்டு அவற்றை கிராம மக்கள் மற்றும் குத்தகைதாரர்கள் மரத்தில் இருந்து எடுத்து தரம் பிரித்து கொட்டை நீக்கி மொத்த விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் போதிய மழை இல்லாதால் கடந்த சில ஆண்டுகளாக புளி விளைச்சல் குறைவாகவே இருந்து வந்தது. இந்த

ஆண்டு மாவட்டம் முழுவதும் புளிய மரங்களில் புளி விளைச்சல் அதிகமாக காணப்படுகிறது. இந்த புளிகள் பறிக்கப்பட்டு சேகரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

<u>வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி</u>

இதுகுறித்து காளையார்கோவில் அருகே உள்ள சூரம்பட்டி கிராமத்தில் உள்ள புளிய மரங்களில் புளியம்பழம் பறிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பாலா என்பவர் கூறியதாவது:– கடந்த ஆண்டை விட இங்கு புளியம்பழங்களின் விளைச்சல் இரு மடங்காக அதிகரித்துள்ளது. இப்பகுதியில் உள்ள விவசாயிகள் மரங்களில் இருந்து புளியம் பழங்களை சேகரித்து அவற்றை கமிஷன் மண்டிகளிலும், கிராமங்களுக்கு வரும் வியாபாரிகளிடமும் விதை நீக்காமல் அப்படியே விற்று விடுகின்றனர்.

இதை வாங்கும் வியாபாரிகள் அவற்றை திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள ஆலைகளுக்கு அனுப்பி அங்கு புளியம்பழங்களின் ஓடு மற்றும் கொட்டைகளை நவீன இயந்திரங்கள் மூலம் பிரித்து அதன்பின் பேக்கிங் செய்து மொத்த விற்பனை கடைகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். வெளி மாநிலங்களுக்கும் புளி அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>விலை குறைவு</u>

புளியம்பழங்களை வெளியில் வைத்து விட்டால் அவற்றின் தரம் மற்றும் நிறம் மாறிவிடும் என்பதால் எந்திரங்கள் மூலம் கொட்டை நீக்கி குளிரூட்டப்பட்ட அறைகளில் வைத்து பாதுகாக்கிறார்கள். கடந்த ஆண்டு இந்த புளி கிலோ ரூ.70 முதல் 80 வரை விற்கப்பட்டது. இந்த ஆண்டு அனைத்து பகுதிகளிலும் புளி விளைச்சல் அதிகமாக இருப்பதால் ரூ.40 முதல் 50 வரையில் தான் விற்கப்படுகிறது. புளியம்பழத்தில் இருந்து நீக்கப்படும் கொட்டைகள் மாட்டுத் தீவனம் மற்றும் உரம் தயாரிப்பதற்காக அவை கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## தஞ்சையில் இருந்து தேனிக்கு 1,200 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தஞ்சையில் இருந்து சரக்கு ரெயிலில் 1,200 டன் புழுங்கல்அரிசி தேனிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நெல் கொள்முதல்

தமிழகத்தில் பொதுவினியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி, மண்எண்ணெய், சர்க்கரை, பருப்பு போன்றவை வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிமாவட்டத்தில் இருந்தும் புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை தஞ்சை மாவட்டத்திற்கு கொண்டு வரப்படும். அதேபோல் தஞ்சையில் இருந்தும் பிற மாவட்டங்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை அனுப்பி வைக்கப்படும்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது

வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

1,200 டன் புழுங்கல் அரிசி

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தில் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளில் இருந்து லாரிகளில் அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன. பின்னர் இந்த அரிசி மூட்டைகள் சரக்கு ரெயிலில் ஏற்றப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,200 டன் புழுங்கல்அரிசி ஏற்றப்பட்டது. இதையடுத்து இந்த சரக்குரெயில் தஞ்சையில் இருந்து தேனிக்கு புறப்பட்டு சென்றது.